| ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம் | நாள் :08.02.08 |
|---|---|

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

'சோதனையின் போதே துஆவின் வியக்கத்தக்க விளைவும், தாக்கமும் வெளிப்படுகிறது. நமது இறைவன் துஆவின் மூலமாகவே அறியப்படுகின்றான் என்பதே உண்மையாகும்.'

இந்த அடிப்படை விஷயத்தை ஒரு உண்மையான நம்பிக்கையாளர் ஆழமாகச் சிந்தித்து உணர வேண்டும். அவ்வாறே ஒரு மூஃமின் சிந்தித்து உணரவும் செய்கிறார். துஆக்கள் இல்லாமலும் அல்லாஹ்வின் முன்பு குனியாமலும் நாம் ஈமான் கொண்டுள்ளோம் என்ற நமது வாதமே பொருளற்றதாக ஆகி விடும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பதுபோன்று நமது இறைவன் துஆக்களின் மூலமாகவே அறியப்படுகிறான் என்பதே இன்று ஒவ்வொரு அஹ்மதியிடமும் இருக்கும் சிறப்பம்சமாக இருக்கின்றது; அவ்வாறு இருக்கவும் வேண்டும். சோதனைகளின்போது மட்டுமின்றி சுகமான இன்பமான நாட்களிலும்கூட இறைவன் முன்பு எப்போதும் குனிந்த நிலையில் அவனைப் பற்றிய அச்சத்தை உள்ளத்தில் கொள்பவர்தான் உண்மையான மூஃமின் ஆவார். இவர்களுக்கு சோதனைகள் வரும்போது முன்பை விட அதிகமாக இவர்களது ஈமான் வலுவடைவது மட்டுமல்லாமல் முன்பை விட பல மடங்கு அதிகமாக தமது ஈமானில் இவர்கள் முன்னேறுகின்றார்கள். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கான முயற்சியில் முன்னரை விட அதிகமாக அவர்கள் வேகமாக செயல்படுகின்றார்கள். தற்காலிக சோதனைகளும் தடைகளும் இவர்களது பாதங்களை தடுமாற்றம் அடையும்படி செய்வதில்லை. மாறாக, இந்த சோதனைகள், தடைகள் ஆகியவற்றின் காரணமாக அவர்கள் இறைவணக்கத்தில் மேலும் முன்னேறுகின்றார்கள். எனவே, அத்தகைய புரட்சியைத்தான் ஒரு அஹ்மதி இடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஏற்படுத்தி இருக்கின்றார்கள். எதுவரையில் நாம் இப்படிப்பட்ட நிலைமையில் தொடர்ந்து உறுதியுடன் நிலைத்திருப்போமோ அதுவரை அல்லாஹ்வின் அருட்களை ஈர்ப்பவர்களாக நாம் ஆகிக் கொண்டேயிருப்போம்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

துஆ மற்றும் துஆ ஏற்றுக் கொள்ளப்படுதல் ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் சில நேரங்களில் சோதனைக்குமேல் சோதனைகள் வருகின்றன. இடுப்பை முறிக்கின்ற வகையிலுள்ள சோதனைகள்கூட வருகின்றன. ஆனால், தமது கொள்கையில் உறுதியோடு நிலைத்திருப்பவர்களும், தூய இயல்பை உடையவர்களும் இப்படிப்பட்ட சோதனைகளின் போதும் துன்பங்களின் போதும் தமது இறைவனின் அருளின் நறுமணத்தை உணர்கின்றனர். இந்த சோதனைகளுக்குப் பிறகு இறை உதவி வருவதை அவர்கள் தமது தொலைநோக்குப் பார்வை மூலம் காண்கின்றார்கள். இப்படிப்பட்ட சோதனைகள் வருவதிலுள்ள ஒரு இரகசியம் இதன் மூலம் துஆவிற்கான ஆர்வம் அதிகமாகின்றது. ஏனென்றால், எந்த அளவு நிம்மதியின்மையும் வேதனையும் அதிகரிக்கின்றதோ அந்த அளவு ஆன்மாவில் உருக்கம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இது துஆ கபூல் ஆவதற்கான காரணிகளில் ஒன்றாக இருக்கிறது. எனவே, ஒருபோதும் அஞ்சக்கூடாது. மேலும் பொறுமையின்மை, நிம்மதியின்மை ஆகியவற்றிற்கு இலக்காகி அல்லாஹ்வின் மீது தப்பெண்ணம் கொண்டு விடக் கூடாது. என்னுடைய துஆ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்றோ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றோ ஒருபோதும் எண்ணக் கூடாது. அப்படிப்பட்ட யூகம் உண்மையில் இறைவன் துஆக்களை ஏற்றுக் கொள்பவனாவான் என்ற

அவனது பண்பை மறுப்பதாகி விடும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களிலிருந்து எப்போதும் அல்லாஹ்வின் முன்பு குனிவதுதான் ஒரு அஹ்மதியின் சிறப்புத் தன்மையாக இருக்க வேண்டும் என்பது தெரிகின்றது. தற்காலிக சோதனைகளும், தடைகளும் இன்னும் நமக்கு பொலிவை வழங்கங்கூடியவையாகத்தான் உள்ளன.

இன்றைய நாட்களில் உலகின் சில நாடுகளில் அஹ்மதிகளுக்கு தொல்லைகள் கொடுக்கும் பணி திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. நேரடியாகவும், மறைமுகமாகவும் அஹ்மதிகளுக்கு தொல்லைகள் கொடுப்பதற்கான திட்டம் தீட்டப்பட்டிருக்கின்றது. பொறாமையின் நெருப்பே இப்படிப்பட்ட மக்கள் பிரிவுகள் மற்றும் அரசாங்கங்களை அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டுகிறது. இந்தப் பொறாமையின் நெருப்பு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் இன்னும் அதிகமாக கெழுந்துவிட்டு எரிய வேண்டியதிருக்கிறது. முஸ்லிம்கள் தரப்பிலிருந்தும் முஸ்லிம் அல்லாதவர்கள் தரப்பிலிருந்தும் இந்த பொறாமையின் நெருப்பு எரிந்து கொண்டிருக்கிறது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் இஸ்லாத்திற்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைக் கண்டு அதனைச் சகித்துக் கொள்ள முடியாத காரணத்தால் முஸ்லிம் அல்லாதவர்கள் தரப்பிலிருந்தும் பொறாமையின் நெருப்பு வெளிப்படுகின்றது. முஸ்லிம் தலைவர்கள், முல்லாகள் ஆகியோரிடமிருந்து அவர்களின் அரசாங்கமும் பதவியும் பறிபோய் விடக் கூடாதே என்ற கவலையின் காரணமாக இந்த பொறாமையின் நெருப்பு வெளிப்படுகின்றது. இத்தகைய முயற்சியில் வெற்றி பெறுவதற்காக முஸ்லிம்களுக்கு முஸ்லிம் அல்லாதவர்கள் முன்பாக தலைகுனிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் அதனை ஒரு குறையாக கருதவில்லை. அல்லாஹ் இவர்களுக்கு அறிவை வழங்குவானாக. இவர்கள் மீது கருணை காட்டுவானாக. இப்படிப்பட்ட செயல்களால் முஸ்லிம்கள் தங்களது கால்களை அவர்களே வெட்டி எறிகின்றார்கள். அஹ்மதிய்யத்தை எதிர்க்க வேண்டும் என்பதற்காக மட்டும் அவர்கள் அவ்வாறு செய்கின்றார்கள். அல்லாஹ்வின் விதியுடன் அவர்கள் சண்டையிட முயற்சி செய்தால் அவர்கள்தான் அழிந்து போவார்கள். வெளிப்படையாக கலிமா சொல்பவர்களாக இவர்கள் இருந்தும் கூட அனுதாபம் காட்டும் உணர்வின் காரணமாக நாம் இவர்களுக்காக துஆ செய்ய வேண்டும்.

இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வருகை தொடர்பாக எங்கு **வ ஆகரீன் மின்ஹும் லம்மா யல் ஹகூபிஹிம்** என்ற வசனத்தில் அல்லாஹ் அறிவிப்புச் செய்துள்ளானோ அதே வசனத்தில் **வஹுவல் அஸீஸுல் ஹகீம்** என்றும் அவன் கூறியுள்ளான். வல்லோனும் ஞானமிக்கவனுமாகிய நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹை அனுப்பியுள்ளேன் என்றே அல்லாஹ் இவ்வசனத்தில் அறிவித்துள்ளான். எவராலும் வல்லமைமிக்க இந்த இறைவனின் பணியை தடுக்க முடியாது. நுட்பமான ஞானமிக்க அந்த இறைவன் இஸ்லாமிய போதனைகளின் நுட்பமான ஞானங்கள் என்ற முத்துக்களை இந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டு அவர்களுடன் இணைந்து நிற்பதன் மூலமாகத்தான் பெற முடியும் என்று தீர்ப்பளித்துள்ளான். எங்கு நாம் இந்த தூதுச் செய்தியை உலகத்திற்கு வழங்க வேண்டியுள்ளதோ அங்கு பொறாமை கொள்பவர்களின் பொறாமையிலிருந்தும் சோதனைகளிலிருந்தும் வெற்றி கரமாக வெளியேறி இறைவனின் அடைக்கலத்தின் கீழ் வருவதற்காக அதிகமாக துஆ செய்வது அவசியமாகும். எந்த நாடுகளில் அஹ்மதிகளுக்கு கொடுமைகள் இழைக்கப்படுகின்றதோ அந்த நாட்டிலுள்ள அஹ்மதிகள் தங்கள் பாதங்கள் உறுதியாக நிலைநிற்பதற்காக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ்வின் வீட்டை பற்றிப் பிடித்தவாறு அவனுக்கு முன்பு அவர்களின் எந்த அளவுக்கு குனிய வேண்டும் என்றால் அதன் காரணமாக விரைவாக அவர்கள் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற காட்சிகளையும் வெற்றியின் காட்சிகளையும் காண வேண்டும்.

பிறகு, உலகிலுள்ள மற்ற அஹ்மதிகளிடம் அதாவது, எவர்கள் கொடுமைகளுக்கு இலக்காகாமல்

அமைதியுடன் இருந்து வருகின்றார்களோ அவர்கள் தங்கள் சகோதரர்களுக்காக துஆ செய்யுங்கள். ஏனென்றால், நம்பிக்கையாளர்கள் அனைவரும் ஒரே உடலைப் போன்று இருக்கின்றார்கள். உடலிலுள்ள ஏதாவது ஒரு உறுப்புக்கு துன்பம் ஏற்பட்டால் முழு உடலும் அதன் வேதனையை உணரும். அவ்வாறே ஏதாவது ஒரு அஹ்மதிக்கு ஏற்படும் துன்பம் நமது துன்பமாக இருக்க வேண்டும். மாறாக, உலகில் எந்தவொரு மனிதனுக்கு துன்பம் ஏற்பட்டாலும் அது நமது துன்பமாக மாறிவிடும் அளவுக்கு நாம் உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டும். எனவே, இந்த சோதனைகளில் இருந்து அஹ்மதிகள் வெற்றிகரமாக வெளியில் வருவதற்கு எந்த அளவு நாம் வேதனையுடன் துஆ செய்வோமோ அதற்கேற்ப துஆக்களை ஏற்றுக் கொள்ளும் அந்த இறைவன் நமது துஆக்களை கேட்டு நமது சகோதரர்களின் இன்னல்களை அகற்றி அவர்கள் மீது அருள் செய்வான்.

இவர்கள் நமக்குத் தருகின்ற துன்பங்களும், ஏற்படுத்துகின்ற தடைகளும் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் என்று இவர்கள் நினைக்கின்றார்கள். இது மனிதனின் வேலையாக இருந்தால் அல்லது இந்த ஜமாஅத் மனிதத் திட்டத்தினால் உருவான ஜமாஅத்தாக இருந்தால் கடந்த 100 வருட காலத்தில் ஜமாஅத்திற்கு எதிராக வீசிய புயல் காற்றானது எப்போதோ ஜமாஅத்தை அழித்திருக்கும்.

பாகிஸ்தானில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இருந்துவரும் எதிர்ப்பு யாருக்குத்தான் தெரியாமல் இருக்கும். ஆனால், அவை நாம் முன்பைவிட அதிகமாக வளர்ச்சியைப் பெறுவதற்கே காரணமாக அமைந்தன. இன்றைய நாட்களில் புளித்த மாவு பொங்குவதைப் போல் பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எதிராக இருந்து வரும் எதிர்ப்பில் ஒரு வேகம் வந்திருக்கிறது. முதலில், இங்குமங்குமாக சிறிய சிறிய எதிர்ப்புகள் வழக்கம்போல் இருந்து வந்தன. ஆனால், அவற்றில் இப்போது ஒரு வேகம் தெரிய வருகிறது. எங்கெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்கின்றதோ அங்கெல்லாம் அஹ்மதிகளுக்கு எதிராக பொய் வழக்குகள் தொடரப்படுகின்றன. கடந்த சில நாட்களுக்கு முன் ஒரு 13 வயது அஹ்மதி சிறுவனுக்கு எதிராக போலீஸில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த சிறுவன் ஒரு மவ்லவியை அடித்து விட்டதாக அங்குள்ள மவ்லவிமார்கள் கூறியுள்ளனர். எவர் அடிக்கப்பட்டதாக புகார் கொடுக்கப் பட்டுள்ளதோ அவரது உறவினர்களே அவர் அடிக்கப்படவில்லை என மறுப்பு தெரிவித்துள்ளனர். அந்த சிறுவன் எந்த அளவு அந்த மவ்லவியை அடித்தார் என்றால், இறுதியில் அதனால் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டிய நிலைமை வந்து விட்டது என புகார் கொடுக்கப்பட்டுள்ளது. துடிப்பான உறுதிமிக்க ஒரு இளைஞரை 13 வயது சிறுவன் அடித்துக் கொண்டேயிருந்தார். அதற்கெதிரில் அந்த இளைஞர் எதுவுமே செய்யாமல் இருந்தார் என்று இவர்கள் தெரிவித்துள்ளனர். புதிய தலைமுறையிடத்தில் எந்த அளவு பீதியை ஏற்படுத்த வேண்டுமென்றால் அவர்களை அஹ்மதிய்யத்தை விட்டும் விலகும்படி செய்ய வேண்டும் என்பதே இவர்களின் நோக்கமாக இருக்கிறது.

கடந்த குத்பாவில் நான் கூறியிருந்தது போன்று இந்தோனேஷியாவில் அங்குள்ள அரசாங்கம் அஹ்மதிகளின் தெளிவான கொள்கைக்கு எதிராக அஹ்மதிகளை பணிய வைப்பதற்கு முயற்சி செய்து வருகின்றது. பத்திரிகைகளிலும் இதுபோன்ற செய்திகள் வெளிவந்துள்ளன. நாம் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களை இக்காலத்தின் மஹ்தி, மஸீஹ் என்று பறைசாற்றுவதில் இருந்து விலகிவிட்டதாக இவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்கள். இன்டர்நெட்டிலும் இது போன்ற செய்தி வந்துள்ளது. இதைப் பார்த்த அல்லது இப்படிப்பட்ட செய்திகளை செவியுற்ற அஹ்மதிகளும் கூட நிலைமைகளுக்கேற்ப நாம் இவ்வாறு நடந்து கொண்டதில் எவ்வித தவறும் இல்லை என்பதை பிரதிபலிக்கும் வகையில் அவர்கள் இது குறித்து எனக்கு கடிதங்கள் எழுதி வருகின்றனர். அத்துடன் சரியான நிலைமைகள் பற்றி எங்களுக்கு முழுமையாக எதுவும் தெரியாது என்றும் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். உதாரணமாக, ஒருவர் இவ்வாறு எழுதியுள்ளார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹுதைபியா உடன்படிக்கை நடந்த சமயத்தில் ரஸூலுல்லாஹ் (அல்லாஹ்வின் தூதர்) என்ற

சொல்லை உடன்படிக்கையிலிருந்து அடித்து விடும்படி எதிரிகள் கூறியதை ஏற்று அவ்வாறு அந்த சொல் நீக்கப்பட்டுள்ளது என்று அவர் எழுதியுள்ளார். முதலாவது விஷயம் இந்த ரஸூலுல்லாஹ் என்ற சொல்லை யார் அழித்தார்கள்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே அந்த சொல்லை வெட்டி விட்டார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் அந்த சொல்லை வெட்டும்படி கூறப்பட்டபோது எனது எஜமானரே! என்னால் இதை செய்ய முடியாது என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் தெளிவாக கூறிவிட்டார்கள். இதற்குப் பிறகு அந்த சொல் எங்கு எழுதப்பட்டிருந்தது என்பதைக் கேட்டு தெரிந்து கொண்ட பிறகு அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே அதனை தமது கைகளால் வெட்டி விட்டார்கள். நிராகரிப்பவர்களுடன் இந்த உடன்படிக்கை செய்யப்படுவதால் அவர்கள் என்னை அல்லாஹ்வின் தூதராக ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதால் நானே ரஸூலுல்லாஹ் என்ற சொல்லை வெட்டி விட்டேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆனால், எவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ்வின் தூதர் என்று ஏற்றுக் கொண்டுள்ளார்களோ அவர்கள் இப்படிப்பட்ட செயலை செய்ய துணியவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தன்னை ஏற்றுக் கொண்டவர்களது உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களை இவ்வாறு செய்ய கட்டளையிடவுமில்லை.

எனவே, மற்றவர்களது கருத்துக்கேற்ப விட்டுக் கொடுத்து செயல்பட்டு அவர்கள் கூறுவதற்கெல்லாம் ஆமாம் போடுவது நமது பணியல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பராக விளங்கிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உயர் தகுதிக்கு களங்கம் கற்பிக்கும் வகையிலுள்ள எந்த பணியையும் நாம் செய்ய மாட்டோம். நாங்கள் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றும் மஹ்தி என்றும் கருதுகின்றோம். இந்த கருத்திலிருந்து விலகி நின்றால் எங்களுக்கு எவ்வித தகுதியும் இல்லாமல் ஆகிவிடும். நாங்கள் அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்று ஏற்றுக்கொண்டு அவர்களது ஜமாஅத்தில் இணைந்திருப்பதில்தான் எங்களது அழகே இருக்கின்றது. அவர்கள்தான் இருளுக்கும் ஒளிக்குமுள்ள வித்தியாசத்தை எங்களுக்கு காட்டித் தந்துள்ளார்கள். இந்த இருள் நிறைந்த காலத்தில் கலிமா ஷஹாதத்தின் உண்மையான பொருளை இந்த மஹ்தியும் மஸீஹும்தான் எங்களுக்கு திறந்து காட்டி தந்துள்ளார்கள் என்பது எங்கள் வாதமாக இருக்கின்றது. அவர்கள்தான் இஸ்லாத்தின் உண்மையான ஒளியை எங்கள் உள்ளங்களில் நிரப்பினார்கள். திருக்குர்ஆனின் போதனைகளுக்கு ஏற்ப இறைவனை சந்திப்பதற்குரிய வழிகளை இந்த மஹ்தியும், மஸீஹும்தான் எங்களுக்கு கற்றுத் தந்தார்கள். மஹ்தியும், மஸீஹுமாக இருக்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த உண்மை பேரன்பர்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பில் மூழ்குவதற்கான புதிய புதிய வழிகளை எங்களுக்கு கற்றுத் தந்துள்ளார்கள். எவருக்கு மஹ்தி, மஸீஹ் என்ற பெயர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே சூட்டியுள்ளார்களோ மேலும் எவரைப் பற்றி நம்முடைய மஹ்தி என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்களோ அந்த நபரை மஹ்தி, மஸீஹ் என்று கூறுவதிலிருந்தும் நாம் எவ்வாறு விலக முடியும்? தற்காலிக துன்பங்களின் காரணமாக அல்லது மவ்லவிமார்களை மகிழ்விப்பதற்காக அவர்களை நாம் மஹ்தி, மஸீஹ் என்று கூறுவதை விட்டுவிட முடியுமா? அந்த மஹ்தி, மஸீஹ் தொடர்பாக முன்னறிவிக்கப்பட்ட எல்லா அடையாளங்களும் நிறைவேறிய பிறகு காலமும் அந்த மஹ்தியின் தேவையை எதிர்பார்த்து அழைக்கின்றபோது உலகத்தை மகிழ்விப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவருக்கு மஹ்தி, மஸீஹ் என்று பெயர் வைத்துள்ளார்களோ அந்த நபருக்கு வேறு ஏதாவதொரு பெயரை நாம் எப்படி வைக்க முடியும்? மஹ்திக்காக வெளிப்பட்ட சூரிய, சந்திர கிரகணங்கள் மஹ்தியல்லாத வேறு நபருக்கு தோன்றியது என்று நாம் ஏற்றுக் கொள்வோமா? அல்லது நவூதுபில்லாஹ் (அல்லாஹ் காப்பானாக) அல்லாஹ்வின் இந்த சாட்சியையே நாம் பொய்யாக்கி விடுவோமா? ஒருபுறம் நாம் அவர்களிடம் பைஅத் செய்து அவர்களின் ஜமாஅத்தில் நுழைந்துவிட்டு

அல்லாஹ் அவர்களுக்கு அறிவித்த **இன்னல் மஸீஹுல் மவ்வூதல்லதீ யர்குபூனஹு ஹுவ அன்த** - அதாவது நிச்சயமாக எதிர்பார்க்கப்படுகின்ற அந்த வாக்களிக்கப்பட்ட மஹ்தியும் மஸீஹும் நீர் தான் என்ற இல்ஹாமை பொய் என்று கருதுவோமா? தொடர்ந்து அந்த இல்ஹாமில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

**வலா தகூனன்ன மினல் மும்தரீன்** - அதாவது நீர் சந்தேகம் கொள்பவராக ஆக வேண்டாம்.

பிறருடைய கருத்துக்கு ஒத்துப்போக வேண்டும் என்பதற்காக நான் இதுவரை கூறிய விஷயங்களை செயலளவில் ஏற்று நடக்காமல் நம்மை அஹ்மதிகள் என்று நாம் கூறிக்கொள்ள முடியுமா? சுருக்கமாக, மஹ்தி மஸீஹை மறுப்பது அஹ்மதிய்யத்தை மறுப்பதேயாகும். எனவே, இப்படிப்பட்ட விஷயத்தை ஒருபோதும் எந்த அஹ்மதியாலும் சகித்துக் கொள்ள முடியாது.

இந்தோனேஷியா அரசாங்கத்திற்கும் அஹ்மதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கை தொடர்பாக பத்திரிகைகளில் வெளிவந்துள்ள செய்திகளை பார்த்து விட்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் நுழையாமல் இருக்கும் லாகூரிகளுக்கு இச்செய்திகளை பெரிதாக்கி கூச்சலிடுவதற்கான ஒரு வாய்ப்பும் கிடைத்து விட்டது. புளித்த மாவு பொங்குவது போல் இவர்களிடமும் எதிர்ப்பின் வேகம் அதிகரித்துள்ளது. அஹ்மதிகள் தங்கள் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்று அவர்கள் செய்தி வெளியிட்டுள்ளார்கள். எங்களது கொள்கைக்கு வெற்றி கிடைத்துள்ளது என்று கூறுவதே அவர்களின் அசல் நோக்கமாகும். இப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நபியல்ல என்பதை அஹ்மதிகளும் ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். மாறாக, அவர்களை ஒரு முஜத்தித் அல்லது ஒரு நேர்வழி காட்டுபவர் என்று மட்டுமே அவர்கள் கூறுகின்றார்கள் என்று அஹ்மதிகள் தொடர்பாக இவர்கள் கூற ஆரம்பித்துள்ளார்கள்.

முதலாவது விஷயம், இந்தோனேஷியாவிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக அரசாங்க உயர் அதிகாரிகளுடன் பேசுவதற்காக நமது குழுவிலுள்ளவர்களின் உள்ளத்தில் நாம் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்கள் மஹ்தி, மஸீஹ், நபி என்று ஏற்றுக் கொள்ளக் கூடாது என்ற எண்ணம் அல்லது அது பற்றிய எள்ளளவு சந்தேகம்கூட இருக்கவில்லை என்பதே உண்மை. அவ்வாறு ஓர் அஹ்மதியால் நினைத்துக்கூட பார்க்க முடியாது. அல்லாஹ்வின் அருளால் இந்தோனேஷியாவிலுள்ள ஜமாஅத் தனது மனத்தூய்மையிலும், நம்பிக்கையிலும் மிகவும் முன்னேறியுள்ள ஒரு ஜமாஅத்தாகும். இவ்விஷயத்தில் முதல் அணியில் நிற்கும் ஜமாஅத்தாக அது இருக்கின்றது. இவர்கள் அஹ்மதிய்யத்திற்காக செய்திருக்கும் பொருள் தியாகங்களும் உயிர் தியாகங்களும் இவர்களது மனத்தூய்மையிலும் நம்பிக்கையிலும் எவ்வித குறையும் ஏற்படவில்லை என்பதற்குரிய தெளிவான சாட்சியாக விளங்குகின்றது.

எனவே, இது இந்தோனேஷியா ஜமாஅத்தின் மீது சுமத்தப்படும் தவறான குற்றச்சாட்டாகும். தற்காலிக பலன்களுக்காக அவர்கள் தங்கள் பலவீனத்தை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்கள் என்று நாம் கூறுவதாக இருந்தால் அது அவர்கள் மீது நாம் சுமத்தும் மிகப்பெரும் தவறான குற்றச்சாட்டாகி விடும். அரசாங்கம் எந்த விஷயத்தை முன் வைத்து உடன்படிக்கையில் நம்மிடம் கையெழுத்து வாங்கியுள்ளதோ அவை தெளிவான சொற்களில் எழுதப்பட வில்லை. இன்னும் சொல்லப்போனால் அதற்கு பல பகுதிகள் உள்ளன. அவற்றை ஏற்றுக் கொண்டதால் அஹ்மதிகள் தங்களது ஈமானுக்கு மாற்றமான கருத்தை வெளியிட்டுள்ளனர் என்று எவராலும் குற்றம் சுமத்த முடியாது. எனவே, தனது ஈமானில் பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளார் என எந்தவொரு இந்தோனேஷிய அஹ்மதிகள் மீதும் எவரும் குற்றம் சுமத்த முடியாது. இந்தோனேஷிய ஜமாஅத்தைச் சேர்ந்த அஹ்மதிகளும் இதனை வெளிப்படையாக என்னிடம் கூறியுள்ளார்கள். தங்களது கடிதங்கள் மூலம் இதனை அவர்கள் எனக்கு தெரிவித்துள்ளார்கள். மஹ்தி, மஸீஹ் ஆகிய சொற்கள் குறிப்பாக குறிப்பிட்டு அந்த உடன்படிக்கையில் எழுதப்படாமல் இருந்ததன்

காரணமாக பத்திரிகையாளர் களுக்கும் நமது பத்திரிகை தந்திரத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. எந்தவொரு அஹ்மதியின் உள்ளத்திலும் ஒரு துளி அளவுகூட சந்தேகம் கொள்வதற்கு வாய்ப்பற்ற ஒரு செய்தியை அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். லாகூரிகள் இந்த செய்தியைப் பற்றிப் பிடித்துக் கொண்டு நன்றாக அதை பரப்புகின்றார்கள்.

ஆனால், நான் கடந்த குத்பாவில் நமது நிலை பற்றி தெளிவாக விளக்கி கூறிய பிறகு நமது தெளிவான நிலை குறித்து ஒரு பத்திரிகையிலும் தெளிவான செய்தி வெளியிடப்பட்டிருக்கின்றது. எவ்வாறு இருப்பினும், இத்தகைய செய்தியை வெளியிட்ட பத்திரிகை இவ்விஷயத்தில் கண்ணியமாக நடந்து கொண்டிருக்கின்றது. இருப்பினும் லாஹூரில் தங்கள் பிடிவாதத்தை கைவிடாமல் இது தொடர்பாக கூச்சலிடுவதும், இங்குள்ள நமது **Press section** ற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இதுவரை உங்கள் கருத்தை தெளிவாக நீங்கள் வெளியிடவில்லை என்று கூறுவதும் இவர்கள் தங்கள் பிடிவாதத்தில் தொடர்ந்து நீடிப்பார்கள் என்பதைக் காட்டுகிறது. எனவே, இறைவன் விரும்பினால்தான் இவ்விஷயத்தில் இவர்களுக்கு திருப்தி கிடைக்க முடியும். ஒருவர் ஒரு விஷயத்தில் பிடிவாதமாக இருந்து உண்மை தெரிந்த பிறகும் தனது நிலையிலிருந்து மாறாமல் இருந்தால் அப்படிப்பட்டவர்களை மனிதர்களால் திருப்திபடுத்த முடியாது.

பைஅத்தில் நுழையாத இவர்களிடம் மீண்டும் நான் கூறிக் கொள்கின்றேன். நீங்கள் இறைவனுக்கு அஞ்சுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளை பாருங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இல்ஹாமிலுள்ள சொற்களை கவனமாக சிந்தித்துப் பாருங்கள். பிறகு உங்களையே நீங்கள் ஆய்வு செய்து பாருங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்பாக நீங்கள் வைத்திருக்கும் கொள்கையின் மூலமாக உங்கள் பாதங்கள் எப்போதாவது முன்னேற்றத்தை நோக்கி சென்றுள்ளதா? கிலாஃபத்தை விட அஞ்சுமன் தான் பெரிதென்று நினைக்கின்றவர்கள் உலகில் எங்கேயாவது இஸ்லாத்தின் வெற்றியின் கொடியை நட்ட முடிந்ததா? அல்லது உண்மையான வேதனையுடன் இந்த கொடியை நடுவதற்கு நீங்கள் முயற்சி செய்துள்ளீர்களா? அல்லது இப்படிப்பட்ட நற்பாக்கியம் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் மஹ்தி, மஸீஹ் என்றும் நபி என்றும் ஏற்றுக் கொண்டவர்களுக்கு கிடைத்திருக்கின்றதா? அவர்களோ வாக்களிக்கப்பட்ட மஹ்தி மஸீஹின் மறைவுக்குப் பிறகு கிலாஃபத்தை உண்மையானது என்று கருதுகின்றார்கள். கிலாஃபத்திடம் பைஅத் செய்தவர்கள் உலகின் 189 நாடுகளில் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தின் தூதை எட்ட வைத்து விட்டார்கள். ஆனால், நீங்கள் என்ன செய்துள்ளீர்கள்? இறைவனது செயலளவிலான சாட்சியம் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களை நபி என்று ஏற்றுக் கொள்பவர்களுக்கு சாதகமாக உள்ளதா? அல்லது அன்னாரை ஒரு குரு அல்லது ஒரு நேர்வழிகாட்டி அல்லது ஒரு முஜத்தித் என ஏற்றுக் கொள்பவர்களுக்கு சாதகமாக உள்ளதா?

எனவே, இறைவனுக்கு அஞ்சியவாறு இந்த பிடிவாதத்தை விட்டு விடுங்கள். நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதியுள்ள நூல்களை வெளியிடுகின்றீர்கள். அதைப் படிப்பதற்கும் அதிலுள்ள கருத்துக்களை புரிவதற்கும் அல்லாஹ் உங்களுக்கு நல்வாய்ப்பை வழங்குவானாக. இறைவனது கூற்றுகளில் சிலவற்றின் மீது ஈமான் கொண்டு சிலவற்றை முற்றிலும் கைவிடுபவர்கள் பற்றி அல்லாஹ் என்ன கூறியுள்ளான் என்பதை திருக்குர்ஆனைத் திறந்து பார்த்து தெரிந்து கொள்ளுங்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஷரீஅத்தையுடையவராக இருப்பதும் இறைவனிடமிருந்து செய்திகளைப் பெற்று முன்னறிவிப்பு செய்வதும் நபிக்குரிய நிபந்தனையல்ல. நபித்துவம் இறைவனால் வழங்கப்படும் ஒரு அருள் மட்டுமேயாகும். அதன் மூலமாக மறைவான செய்திகள் திறந்து தரப்படுகின்றது. நான் இறைவனிடமிருந்து செய்தி பெற்று ஏறக்குறைய 150 முன்னறிவிப்புகளை செய்து அவை தெளிவாக

நிறைவேறி விட்டதை தெளிவாக கண்ட பிறகும் என்னுடன் தொடர்புபடுத்தி நபி மற்றும் ரஸூல் என்ற பெயர்களை கூறுவதை நான் எப்படி மறுக்க முடியும்? இறைவனே எனக்கு இந்த பெயர்களை சூட்டியிருக்கும்போது நான் ஏன் அவற்றை மறுக்க வேண்டும்? அல்லது அவனைத் தவிர மற்றவர்களுக்கு நான் ஏன் அஞ்ச வேண்டும்? என்னை அனுப்பிய அந்த இறைவன் மீது ஆணையிட்டு நான் கூறுகின்றேன். அந்த இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுவது சாபத்திற்கு உரியவர்களின் செயலாகும். அவனே என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹாக அனுப்பியுள்ளான். நான் எவ்வாறு திருக்குர்ஆனின் வசனங்களின் மீது நம்பிக்கை வைத்துள்ளேனோ அவ்வாறே அதில் சிறிதளவுகூட வித்தியாசமில்லாமல் இறைவனிடமிருந்து எனக்கு வந்துள்ள இந்த தெளிவான வஹீயின் மீதும், நான் நம்பிக்கை கொள்கிறேன். அதன் உண்மை அதனை பின்தொடர்ந்து வந்துள்ள அடையாளங்கள் மூலம் எனக்கு திறக்கப்பட்டுள்ளது. என் மீது இறங்கியுள்ள அந்த தூய வஹீ ஹஸ்ரத் மூஸா (அலை), ஹஸ்ரத் ஈஸா (அலை), ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) ஆகியோர் மீது தனது வசனங்களை இறக்கிய அதே இறைவனிடமிருந்தே இறங்கியுள்ளது என்பதை பைத்துல்லாஹ் (இறை இல்லமான கஃபா) வில் நின்று சத்தியம் செய்து கூறுவதற்கு நான் தயாராக உள்ளேன். எனக்காக வானமும், பூமியும் சாட்சி பகர்ந்தன. நான் கலீஃபத்துல்லாஹ் - அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருக்கின்றேன் என்று வானமும் கூறியது; பூமியும் கூறியது. ஆனால், முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப நான் மறுக்கப்பட வேண்டியதும் அவசியமானதாக இருக்கின்றது. ஏனென்றால், எவர்களது உள்ளங்களில் திரை இருக்கின்றதோ அவர்கள் என்னை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். நிச்சயமாக இறைவன் எனக்கு உதவி செய்வான் என்பதை நான் அறிவேன். இவ்வாறே எப்போதும் அவன் தனது தூதர்களுக்கு உதவி செய்துள்ளான். எவரும் என்னை எதிர்த்து நிற்க முடியாது. ஏனென்றால், அவர்களுக்கு இறைவனின் உதவி கிடைக்காது.

எந்த எந்த இடங்களில் நான் நபித்துவத்தையும் தூதுத்துவத்தையும் மறுத்துள்ளேனோ அங்கெல்லாம் நான் நிரந்தரமான ஒரு ஷரீஅத்தைக் கொண்டு வருபவன் அல்லன் என்ற பொருளில் மட்டுமே அவ்வாறு மறுத்துள்ளேன். அவ்வாறே நான் நேரடியாகவும் இந்த நபித்துவ அருளை பெறவில்லை. மாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து ஆன்மீக அருள்களைப் பெற்று எனக்காக அவர்களது பெயரைப் பெற்று அவர்கள் மூலமாகவே இறைவனிடம் இருந்து மறைவான செய்திகளை பெறும் நற்பேற்றை பெற்றேன். இந்த வகையில் தான் நான் ரஸூலாகவும், நபியாகவும் இருக்கின்றேன். ஆனால், எவ்வித புதிய ஷரீஅத்தையும் கொண்டு வராத நபியாகவும் ரஸூலாகவும் இருக்கின்றேன். இந்த பொருளில் என்னை நபி என்று கூறுவதை நான் ஒரு போதும் மறுக்கவில்லை. இறைவனும் இதே பொருளில் தான் என்னை நபி என்றும் ரஸூல் என்றும் அழைத்துள்ளான். இப்போதும் இந்த பொருளில் நான் நபியாகவும் ரஸூலாகவும் இருப்பதை நான் மறுக்கவில்லை.

இதற்கு பிறகும் இவ்விஷயத்தில் எந்த சந்தேகமும் இருக்க வாய்ப்பு இருக்கின்றதா?

நான் மிகுந்த கனிவுடனும் கண்ணியத்துடனும் வழிதவறி போன நமது சகோதரர்களிடம் கூறிக் கொள்கின்றேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனது கட்டளைக்கேற்ப தான் இறைவனால் அனுப்பப்பட்ட நபி என தெளிவாக அறிவித்துள்ளார்கள். சகோதர்களே! வாருங்கள். இந்த ஆன்மீக புரட்சியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். இதற்காகவே அல்லாஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும், மஹ்தியாகவும், நபியாகவும் அனுப்பியுள்ளான். அவர் இறைவனின் கட்டளைக்கு ஏற்ப உலகின் எல்லை வரை தனது தூதுச் செய்தியை எட்ட வைத்து விட்டார். இறைவனும் தனது உதவியை எப்போதும் அவருக்கு வழங்குவதாக வாக்குறுதி அளித்துள்ளான். மேலும் நான் உனது தூதுச் செய்தியை உலகின் எல்லைகள் வரை எட்ட வைப்பேன் என்று அவன் கூறியுள்ளான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அல்லாஹ் இல்ஹாம் மூலமாக இவ்வாறு

அறிவித்துள்ளான்.

நீர் அஞ்ச வேண்டாம். நான் உன்னுடன் இருக்கின்றேன். உன்னுடன் நடக்கின்றேன். என்னிடத்தில் உனக்கிருக்கும் தகுதியை படைப்பினங்களில் எவரும் அறிய மாட்டார்கள். எவர் உம்மை இழிவடைய செய்ய முயற்சிகள் செய்வாரோ நான் அவரை இழிவடைய செய்வேன். எவர் உமக்கு உதவி செய்ய முன்வருவாரோ அவருக்கு நான் உதவி செய்வேன். நீர் என்னுடையவர். உனது இரகசியம் எனது இரகசியம் ஆகும். நீ எனது நோக்கமாக இருக்கின்றாய். என்னிடத்தில் உனக்கு தனி சிறப்பு உண்டு. நானே உன்னை தேர்ந்தெடுத்துள்ளேன்.

இறைவனது இந்த வாக்குறுதியின் காரணமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு உதவுபவர்களுக்கும் அல்லாஹ் உதவி செய்வான். உஹத் போர்க்களத்தில் முஸ்லிம்களின் பாதங்கள் நிலை நிற்க முடியாமல் போன காரணத்தால் உயிர்களுக்கும் பொருளுக்கும் இழப்பு ஏற்பட்டது. ஆனால், எதிரிகள் வெற்றியை பெற முடியவில்லை. இறுதியில் வல்லமைமிக்க உயர்வான அல்லாஹ் மகிமைக்குரியவன் என்ற முழக்கமே மிகைத்து நின்றது. இன்றும் இறைவனது வாக்குறுதி இவ்வாறே நிறைவேறும்.

கடந்த சில நாட்களுக்கு முன் அரபு நாட்டிலுள்ள நமது அஹ்மதி சகோதரர்களுக்கும் இஸ்லாத்தின் மீது அனுதாபம் வைத்துள்ள நல்லுள்ளம் கொண்டுள்ள அஹ்மதியல்லாத சகோதரர்களுக்கும் கவலையளிக்கக் கூடிய ஒரு விஷயம் நடந்தது. சில பெரிய பெரிய அரபு நாட்டு அரசாங்கங்கள் மௌலவிமார்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அஞ்சி அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தை கண்டு நமது MTA அல் அரபிய்யா LIVE Satellite -ல் வருவதை தடுத்து நிறுத்தி விட்டனர். நல்லொழுக்கத்தின் எதிர்பார்புகள் அனைத்தையும் இல்லாமலாக்கிவிட்டு, நமக்கு எவ்வித அறிவிப்பும் வழங்காமல் இவர்கள் நமது சேனலை தடை செய்ததால் அஹ்மதிகளும் அஹ்மதியல்லாத சகோதரர்களும் தொலைபேசி, ஃபேக்ஸ் மூலமாக எனக்கு தங்களது கவலையை தெரிவித்தனர். எங்களுக்கு தகவல் தராமல் நீங்கள் திடீரென்று சேனலை ஒளிபரப்புவதை ஏன் நிறுத்தி விட்டீர்கள்? என்று அவர்கள் எங்களிடம் கேட்டார்கள். இன்ஷா அல்லாஹ் விரைவில் மீண்டும் ஒளிபரப்ப முயற்சி செய்வோம் என்றே அவர்களிடம் நாம் பதில் கூறினோம். ஆனால், இன்று எனது குத்பாவிலிருந்து இதற்கான காரணம் என்ன என்பதை அவர்கள் கேட்டு தெரிந்திருப்பார்கள்.

மற்றவர்களது கருத்துக்கு இசைந்து போக வேண்டும் என்பதற்காக சில அரசாங்கங்கள் இவ்வாறு தடையை ஏற்படுத்தின. சில அரசாங்கங்கள் பொறாமையின் காரணமாக இவ்வாறு செய்தன. கிறிஸ்தவ பாதிரிமார்கள் செய்த ஆட்சேபனைகளுக்கு MTA மூலம் நாம் பதில்கொடுப்பதால் அவர்களும் இந்த சேனலை தடை செய்யும் படி வற்புறுத்தி கூறி வந்தார்கள். ஆனால், ***அல்லாஹ்வோ அவர்களும் திட்டங்கள் தீட்டினர். நாமும் திட்டங்கள் தீட்டுகின்றோம். அல்லாஹ்தான் எல்லோரையும் விட திட்டம் தீட்டுபவர்களில் சிறந்தவனாக இருக்கின்றான்*** என்று அறிவித்துள்ளான். எனவே, இந்த தடை நமக்கு எவ்வித கவலையும் தரவில்லை. இது அல்லாஹ்வின் பனியாகும். மனிதன் சிந்தித்து பார்க்க முடியாத அளவில் அவன் தனது தூதுச் செய்தியை மக்களுக்கு எட்ட வைக்கின்றான். சில மணி நேரங்கள் அல்லது ஒரு நாள்தான் இந்த சேனல் நிறுத்தப்பட்டிருக்கும் என்று நான் நினைக்கின்றேன். அதற்கு பிறகு அல்லாஹ் ஒரு ஏற்பாட்டை செய்தான். அல்லாஹ் ஐரோப்பாவிலுள்ள ஒரு Satellite உடன் நமக்கு தொடர்பு கொள்ள வாய்ப்பளித்தான். இதற்கு முன்னர் பல முறை இந்த Satellite உடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்தபோது அங்கு நமக்கு இடம் கிடைக்கவில்லை. ஆனால், MTA - அல் அரபிய்யா சேனலை தடை செய்த பிறகு, அல்லாஹ் தாமாகவே இந்த Satellite கிடைப்பதற்கான ஏற்பாட்டை செய்து விட்டான். இவர்கள் தடை செய்த Satellite -ன் Coverage அரபுநாடுகளில் சில பகுதிகளில் மட்டுமே இருந்தது. ஆனால், இந்த Satellite -ன் Coverage அதைவிட பல மடங்கு அதிகமாக இருக்கின்றது.

இதற்கு முன்னர் மொராக்காவிலிருந்தும் அதற்கருகிலுள்ள நாடுகளிலிருந்தும் எங்களால் **MTA** - அல் அரபிய்யா சேனலை காண முடியவில்லை என்ற தகவல் எங்களுக்கு வந்து கொண்டிருந்தது. இப்போது இந்த புதிய **Satellite** கிடைத்த பிறகு இந்த நாட்டிலுள்ளவர்களும் நமது சேனலைப் பார்க்க முடியும். இன்ஷா அல்லாஹ். இவையாவும் அல்லாஹ்வின் பணியாகும். தற்காலிக தடைகள் வரும்போது மூஃமின் அதிகமாக துஆ செய்ய வேண்டும். ஃபர்ளான தொழுகைகளை சரியாக தொழ வேண்டும். நஃபிலான தொழுகைகளை தொழ வேண்டும். அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூற வேண்டும்.

அஹ்மதிய்யா கிலாஃபத் தோன்றி 100 வருடங்கள் நிறைவேறிய பிறகு அஹ்மதிகள் அதனை வரவேற்கும் முகமாக பல நிகழ்ச்சிகளை தயார் செய்துள்ளனர். அதே சமயத்தில் பொறாமைக்காரர்களின் நெருப்பு கொழுந்து விட்டு எரியும். நம்மிடமிருந்து கிலாஃபத் பறிபோய்விட்டது என்ற பொறாமையில் நிச்சயமாக அவர்கள் நமக்கு இழப்பை ஏற்படுத்துவார்கள். ஆனால், கிலாஃபத் இல்லாமல் நாங்கள் வெற்றி பெற முடியாது என்பதை நமக்கு எதிரிகளாக செயல்பட்டு வரும் ஏனைய முஸ்லிம்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட கருத்துக்களால் அவர்களது நாளிதழ்களும் பத்திரிகைகளும் நிரம்பியிருக்கின்றன. உதாரணமாக ஒரே ஒரு மேற்கோளை நான் உங்கள் முன் வைக்கின்றேன்.

நபித்துவத்தைப் பின்பற்றி அமையும் இஸ்லாமிய கிலாஃபத்தை விட உயர்வான எந்த அமைப்பும் இருக்க முடியாது. உண்மையை சார்ந்திருப்பவர்கள் ஒரே அணியில் ஒன்றுசேராமல் இந்த அமைப்பை ஏற்படுத்துவது எவ்வாறு சாத்தியமாகும்? இப்போது முஸ்லிம் உம்மத் எப்படிப்பட்ட சீர்குலைந்த நிலையில் இருக்கின்றதென்றால் எல்லாவற்றிலிருந்தும் இந்த முஸ்லிம் உம்மத்தை விலக்கி வைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் முஸ்லிம் உம்மத் எந்த உயர்வான நோக்கத்திற்காக தியாகங்கள் செய்து பாகிஸ்தானை பெற்றதோ அந்த நோக்கத்தில் நாம் வெற்றி பெற வேண்டும். நாம் சுதந்திரமான ஒரு நாட்டில் இஸ்லாமிய அமைப்பை உருவாக்குவதற்காகத்தான் இப்படிப்பட்ட தியாகங்களை செய்தோம். ஆனால், அந்த நாடோ ஃபிராடு மற்றும் ஏமாற்றுதல் ஆகியவற்றின் வடிவமாக மாறி விட்டது. முஸ்லிம் உம்மத் சிறந்து விளங்குவதன் இரகசியம் நாம் ஒற்றுமையாக ஒரே அணியில் இருந்து நபித்துவ வழியில் கிலாஃபத்தை ஏற்படுத்துவதில்தான் இருக்கின்றது.

அந்தோ! இவர்கள் தங்களது பிடிவாதத்தை கைவிட்டு விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். இமாம் மஹ்தி தோன்றிய பிறகே கிலாஃபத் ஏற்படும் என்றும் இவர்களின் இன்னொரு அறிக்கையில் இவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த இமாம் மஹ்தியும் தோன்றி விட்டார். அந்த இமாம் மஹ்தி மூலமாக இப்போது கிலாஃபத் அமைப்பு நிறுவப்பட்டு விட்டது. எனவே, இவர்கள் இனி எவ்வளவு முயற்சி செய்தாலும் நபித்துவ வழியில் கிலாஃபத்தை இவர்களால் ஏற்படுத்த முடியாது.

எனவே, நமக்காக துஆ செய்வதுடன் அல்லாஹ் இந்த முஸ்லிம்களுக்கு நேர்வழி காட்டி அவர்கள் உண்மையான நேர்வழியை பெறுவதற்காகவும் நீங்கள் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!


| | |
|---|---|
| **KUTHBA**<br>***HAZRAT KHALIFATHUL MASIH V***<br>**AT BAITHUL FUTUH , LONDON**<br>**ON 08.02.08** | **TRANSLATED BY : M . RAFEEQ AHMAD**<br>**PUBLISHED BY: MAJLIS KHUDDAMUL AHMADIYYA - MELAPALAYAM,**<br>*Asura East Street, Melapalayam,*<br>*Tirunelveli - 627 005. Telefax : 0462-2352456* |